# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2024

### பிரிவு 8 ( 2011 ஆம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 13)

## விவிலிய வினாவிடைப் போட்டி

1. கடவுள் முதல் நாள் எதைப் படைத்தார்? **ஒளி**
2. ஆதிப்பெற்றோரின் பெயர் என்ன? ஆதாம், **ஏவாள்**
3. ஆதிப்பெற்றோரின் புதல்வர்கள் யாவர்? **காயின், ஆபேல்**
4. மோசேயின் புதல்வனின் பெயர் என்ன ? **கேர்சோம்**
5. மோசேயின் பெற்றோர் எக்குலத்தைச் சார்ந்தவர்கள்? **லேவியர்**
6. மோசே வளர்ந்தபின் எகிப்தியன் ஒருவனைக் கொன்றுவிட்டு பாரவோனிடமிருந்து தப்பிச்சென்று எந்த நாட்டில் குடியிருக்கச் சென்றார்? **மிதியான் நாட்டில்**
7. பேழையினுள் வைக்கப்பட்டு நைல் நதிக்கரையில் உள்ள நாணல்களுக்கிடையில் தள்ளிவிடப்பட்ட மோசேயை இது எபிரேயக் குழந்தை என்றுகூறி யாரால் காப்பாற்றப்பட்டு அரச குழந்தையாக வளர்க்கப்பட்டார்? **பாரவோனின் மகளால்**
8. எகிப்தியருக்கு எதிராக கடவுள் எத்தனை பெரும்துன்பங்களை அனுப்பினார்? **10**
9. பாலைநிலத்தில் நடந்துவந்த இஸ்ரேயல் மக்களுக்கு கடவுள் வழங்கிய உணவு யாது? **மன்னா, காடை**
10. தாவீது எந்த ஊரைச் சேர்ந்தவர்? **பெத்லேகேம்**
11. இஸ்மயேலரினால் எகிப்துக்கு கொண்டுசெல்லப்பட்ட யோசேப்பை இஸ்மயேலரிடமிருந்து விலைக்கு வாங்கிய பார்வோனின் மெய்க்காப்பாளனும் தலைவனுமானவரின் பெயர் என்ன? **போத்திப்பார்**
12. மனம் வருந்துதலின் மூலம் இறைவனின் இரக்கத்திற்கு மக்களைத் தூண்டிய இறைவாக்கினர் யார்? **யோனா**
13. யோனா எந்நகருக்கு கடவுளால் அனுப்பப்பட்டார்? **நினிவே**
14. யோனா எத்தனை நாள் திமிங்கலத்தின் வயிற்றுக்குள் இருந்தார்? 3
15. செபமாலை பக்தி முயற்சியை அறிமுகப்படுத்தியவர் யார்? **புனித டொமினிக்**
16. நம்பிக்கையின் தந்தை என அழைக்கப்படுபவர் ய்ார்? **ஆபிரகாம்**
17. அருளடையாளங்களில் திருஅவையின் உறுப்பினராகும் தகுதியை எமக்களிக்கும் அருளடையாளம் எது? **திருமுழுக்கு**
18. சென்ம பாவத்தை கழுவும் அருளடையாளம் எது? **திருமுழுக்கு**
19. பொதுக்குருத்துவத்தில் பங்கு பெறச்செய்யும் அருளடையாளம் எது? **திருமுழுக்கு**
20. திருமுழுக்கில் பயன்படும் பொருட்கள் எவை? **தண்ணீர், மெழுகுதிரி, கிறிஸ்மா தைலம், வெண்ணிற ஆடை**
21. திருமுழுக்கில் பயன்படும் வெண்ணிற ஆடையின் அர்த்தம் என்ன? **தூய்மை**
22. குணமளிக்கும் அருளடையாளங்கள் எத்தனை, அவை எவை? **2, ஒப்பரவு, நோயிற்பூசுதல்**
23. மனம் வருந்துவதற்கான அருளடையாளம் எது? ஒப்புரவு
24. சமூக அருளடையாளங்கள் எத்தனை உண்டு அவை எவை? **2, திருமணம், குருத்துவம்**
25. குருத்துவ அருளடையாளத்தை வழங்குபவர் யார்? **ஆயர்**
26. ஆயர்களை நியமிப்பவர் யார்? **திருத்தந்தை**
27. இறைவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சென்ம பாவமில்லாது பிறந்த முதல் பெண் யார்? **அன்னை மரியா**
28. இம்மானுவேல் என்பதன் பொருள் என்ன? **கடவுள் நம்முடன் இருக்கின்றார்**
29. எந்த அரசன் காலத்தில் இயேசு பிறந்தார்? **ஏரோது**
30. இயேசு எங்கே பிறந்தார்? **பெத்லேகேம்**
31. இயேசுவின் தாயின் பெயர் என்ன? **மரியா**
32. இயேசுவின் வளர்ப்புத்தந்தையின் பெயர் என்ன? **புனித சூசையப்பர்**
33. புனித சூசையப்பரின் தொழில் என்ன? **தச்சுத் தொழில்**
34. குழந்தை யேசுவுக்கு ஞானிகள் கொண்டுவந்த பரிசு எவை? **பொன், தூபம், வெள்ளைப்போளம்**
35. இயேசு எங்கே திருமுழுக்கு பெற்றார்? **யோர்தான் நதிக்கரை**
36. இயேசு யாரிடம் திருமுழுக்கு பெற்றார்? **திருமுழுக்கு யோவானிடம்**
37. இயேசு திருமுழுக்கு பெற்ற போது தூய ஆவியார் எவ்வடிவில் தோன்றினார்? **புறா வடிவில்**
38. இயேசு செய்த முதல் புதுமை என்ன? **கானாவூர் திருமணத்தில் தண்ணீரை இரசமாக்கியது.**
39. “ ஒருவர் தண்ணீராலும், தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது” இது யாரால் யாரக்கு கூறப்பட்டது? **இயேசுவால் நிக்கதேமுவுக்கு**
40. இயேசு அழைத்த முதல் சீடர் யார்? **பேதுரு**
41. பேதுரு இயேசுவை தெரியாது என எத்தனை முறை மறுதலித்தார்? **3**
42. இயேசு குருத்துவத்தை ஏற்படுத்தியது எப்போது? **இறுதி இராவுணவின் போது (பெரிய வியாழன்)**
43. அருட்பணியாளர்களின் திருவிழா எப்போது? **பெரிய வியாழன்**

44. ஆபிரகாம் ஈசாக்கை பெற்றெடுக்கும் போது அவரது வயது எத்தனை? **100**
45. தூய ஆவியின் கொடைகள் எத்தனை? **7**
46. சீடர்கள் பாஸ்கா அன்று புகழ்பாடல் பாடிக்கொண்டு எங்கே சென்றனர்? **ஒலிவமலைக்கு**
**47.** கெத்சமெனித் தோட்டத்தில் இயேசு செபிக்க சென்ற போது அவருடன் சென்ற சீடர்கள் யார்? **பேதுரு, யாக்கோபு, யோவான்**
48. இயேசு தோற்றம் மாறிய போது அவருடன் இருந்த சீடர்கள் யாவர்? **பேதுரு, யாக்கோபு, யோவான்.**
49. இயேசு எத்தனை வயதில் எருசலேம் தேவாலயத்தில் காணாமல் போனார்? 12
50. இயேசு எத்தனை வயதில் நற்செய்திப் பணியை தொடங்கினார்? **30**
51. இயேசு எத்தனை வயதில் சிலுவையில் மரணமடைந்தார்? **33**
52. இயேசுவுக்கு மரணதண்டனை தீர்ப்பை வழங்கியவர் யார்? **பிலாத்து**
53. இயேசு சிலுவை சுமந்துகொண்டு சென்ற போது அவருக்கு சிலுவையை சுமக்க உதவியவர் யார்? **சீரேன் ஊர் சீமோன்**
54. சீரேன் ஊர் சீமோனின் பிள்ளைகள் பெயர் என்ன? **அலக்சாந்தர், ரூபு**
55. கொல்கொத்தா என்பதன் பொருள் என்ன? **மண்டை ஓட்டு இடம்**
56. கொல்கொத்தாவில் இயேசுவிற்கு எதைக் குடிக்கக்கொடுத்தார்கள்? **புளித்த திராட்சை இரசம்**
57. இயேசுவை சிலுவையில் அறைந்த போது நேரம் என்ன? **காலை 9 மணி**
**58.** இயேசுவின் மரணதண்டனைக்காக காரணத்தை அறிவிக்க அறிப்பு பலகையில் என்ன எழுதிவைத்தனர்? **யூதரின் அரசன்**
59. சிலுவையில் இயேசு உரக்க கத்தி உயிர்விட்டபோது நேரம் என்ன? **பிற்பகல் 3 மணி**
**60.** பிலாத்துவிடம் சென்று இயேசுவின் உடலைத் துணிவுடன் கேட்டவர் யார்? **அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு**

## இடைவெளி நிரப்புக

61. “ அருள் மிகப்பெற்றவரே வாழ்க! ……….. உம்மோடு இருக்கின்றார் ” - **ஆண்டவர்** (லூக் 1:26)
62. “ பெண்களுள் நீர் ஆசீர் பெற்றவர், உம் வயிற்றில் வளரும் ………. ஆசீ பெற்றதே” - **குழந்தையும்** (லூக் 1: 42)
63. “ நீரே என் ……நீரே என் கடவுள் ” - **ஆண்டவர்** (யோவான் 21: 28)
**64. “ நான் ………. கண்டேன் ” - ஆண்டவரைக் (யோவான் 20: 18)**
**65. “ ஆண்டவருக்கு ………. செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர் ” - நன்றி (திருப்பாடல் 118:1)**
66. “ உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு ……… உண்டாகுக” - **அமைதி** (லூக்கா 2:13-14)
67. “ஒருவர் மற்றவரிடம் ……… செலுத்துக்ங்கள் ” - **அன்பு** (யோவான் 13:34)
68. “ இதைப் பெற்று உண்ணுங்கள், இது ………. உடல் ” - **எனது** (மத்தேயு 26: 26)
69. “ நான் ஆண்டவரின் அடிமை, உமது சொற்படியே ……… நிகழட்டும் ” - **எனக்கு** (லூக்1: 38)
70. “ உன் தந்தையையும் உன் ……….. மதித்து நட. ” - **தாயையும்** (விடுதலைப் பயணம் 20:12)

## பேச்சுப்போட்டி (மனப்பாடம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.)

### இயேசு கற்றுக் கொடுத்த செபம்

செபங்களில் மிகச்சிறந்த செபம் இயேசு கற்றுக்கொடுத்த செபம். ஏனெனில் இந்த செபத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் இயேசுவின் திரு வாயிலிருந்து மலர்ந்தவை. சீடர்கள் இயேசுவிடம், “எங்களுக்கு செபிக்க கற்றுக் கொடுங்கள்” என்று கேட்ட போது இயேசு, “நீங்கள் செபிக்கும் போது இவ்வாறு செபியுங்கள்” என்று கற்றுக்கொடுத்தார். இயேசு கற்பித்த செபத்தைக் கூற நேரம், காலம் தேவையில்லை. எப்பொழுது வேண்டுமானாலும் செபிக்கலாம். ஏனெனில் இந்தச் செபம் நாம் நம் தந்தையிடம் அன்புடன் பேசுவது போலவும், தேவைகளை கேட்டு பெற்றுக் கொள்வது போலவும் அமைந்துள்ளது. இந்த செபத்தை நாம் நம் அப்பாவிடம் பேசுகிறோம் என்ற உணர்வுடன் செபிக்க வேண்டும். இயேசு கற்பித்த செபத்தை ஒரு முறை சொல்லிப் பார்ப்போமே!

**விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே,**
**உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக,**
**உமது ஆட்சி வருக**
**உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல,**
**மண்ணுலகிலும் நிறைவேறுக**

**எங்கள் அன்றாட உணவை இன்று**
**எங்களுக்குத் தாரும்,**

**எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை**
**நாங்கள் மன்னிப்பது போல,**
**எங்கள் குற்றங்களை மன்னியும்,**
**எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்**
**தீமையிலிருந்து எங்களை மீட்டருளும். ஆமென்.**

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

பாதுவா நகரிலே உதித்தீர் முனிவரே

பாமாலை சூடினோம் கனிவாய் ஏற்பீரே

புதுமை பலவும் புரிந்து மக்கள் குறையை தீர்ப்பீரே

புகழ்ந்து பாடுவோம் உம்புதுமை சேர்ந்து பாடுவோம்

நாங்கள் நம்பி நாடிவந்தோம் துன்பம் விலகவே

நலம் புரிவீரே துயர் துடைப்பீரே

திருமகனை கரத்தில் ஏற்கும் பெரும் வரம் பெற்றீர்

திருத்தணியின் மீதினிலே திருவுளம் கொண்டீர்

தினமும் கருணை வேண்டுகின்றோம் சின்ன இதயத்தில்

திவ்விய பாலனை வேண்டி அருள்தாரீர்